வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   13.12.2024 வெள்ளிக்கிழமை   இதழ் : 347   பக்கங்கள் : 12

# வடக்கில் திடீரென்று உயிரிழந்த சிலருக்கு எலிக்காய்ச்சல் உறுதி!

## தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவின் பரிசோதனை அறிக்கையில் தகவல்

### யாழ். வந்தது விசேட வைத்திய நிபுணர் குழு

கொழும்பு, டிசெம்பர் 13

**வடக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்படாத காய்ச்சலால் உயிரிழந்த 07 பேரிடம் எடுக்கப்பட்ட பல மாதிரிகளில் எலிக் காய்ச்சல் அல்லது லெப்டோஸ்பிரோசிஸ் வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.**



காய்ச்சலால் பீடிக்கப்பட்டு யாழ்.போதான வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்த சிலர் எலிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளதாகப் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என தொற்றுநோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் துஷானி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உயிரிழந்த 7 பேரின் மாதிரிகள் தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கண்டி தேசிய

11

# சஜித் அணி தேசியப் பட்டியலில் மனோ, நிஸாம், மொஹமட், சுஜீவ

கொழும்பு, டிசெ. 13

ஐக்கிய மக்கள் சக்தியின் 4 தேசியப் பட்டியல் பாராளுமன்ற ஆசனங்களுக்கான பெயர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிஸாம் காரியப்பர், ஐக்கிய மக்கள் சக்தியின் சுஜீவ சேனசிங்க மற்றும் அகில இலங்கை மக்கள் காங் கிரஸின் மொஹமட் இஸ்மாயில் முத்து மொஹமட் ஆகியோரின் பெயர்கள்

11

# சபாநாயகருக்கு எதிராக வருகின்றது பிரேரணை!

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

சபாநாயகர் அசோக ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர தீர்மானித்துள்ளதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவம் இதனை கூறினார்.

சபாநாயகர் ஆரம்பத்தில் கலாநிதிப் பட்டம் மற்றும் பல்வேறு பட்டங்களைக் காட்டி மக்களை ஏமாற்றி விட்டார் என அவர் குறிப்பிட்டார்.

11

# ஊழலைக் கட்டுப்படுத்த கனடா முழு ஒத்துழைப்பு!

கொழும்பு, டிசெ. 13

ஊழல் மோசடியை மட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய தூதுவர் எரிக் வொல்ஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத்

11

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதி மயங்கிவிழுந்து உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 13

யாழ்ப்பாணம் சிறைச்சாலை கைதி ஒருவர், யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் அழைத்துச் செல்லப்பட்டவேளை, மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

யாழ். நீதிமன்றத்துக்கு நேற்று காலை வழக்கு ஒன்றுக்காக அழைத்துச் செல்லப்பட்டபோது,

11

# கொழும்புத் துறைமுகத்தில் செயல்பாட்டை ஆரம்பிக்குக!

## அதானி நிறுவனத்திடம் அரசு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 13

அதானி நிறுவனம் கொழும்புத் துறைமுகத்தில் தமது செயல்பாடுகளை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமாகும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று வியாழக்கிழமை கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு ஊடகங்களிடம் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

11

# இந்திய மீனவர் பிரச்னை குறித்து சந்திரசேகர் - சந்தோஷ் ஜா பேச்சு!

கொழும்பு, டிசெ. 13

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோருக்கு இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் எக்ஸ் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது

11



# "சிம்மாசனத்தை அகற்றிவிட்டேன்"

## அமைச்சர் லால்காந்த அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

சிம்மாசனம் போன்று தனது அமைச்சில் இருந்த கதிரையை அகற்றி பொதுமக்கள் என்னுடன் சமமாக அமரக் கூடிய கதிரையை பயன்படுத்துவதாக விவசாய அமைச்சர் கே.டி.லால் காந்த தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னை சந்திக்க வரும் நபர்கள் தற்போது எனக்கு சமமாக அமர்வார்கள்.

11

# இலங்கை மின்சார சபையை ஆக்கிரமிக்கும் மாபியாக்கள்!

## ஜனாதிபதி கட்டுப்படுத்தாவிடின் மின்சாரக் கட்டணம் குறையாது

கொழும்பு, டிசெ. 13

மின்சார சபையை ஆக்கிரமித்துள்ள மாபியாக்களை கட்டுப்படுத்தாமல் மின் கட்டணத்தை குறைக்க முடியாது. அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் சேவை கட்டமைப்பில் உள்ள மாபியாக்களை கட்டுப்படுத்தாவிடின் கோட்டாபய ராஜபக்ஷவின் கதியே தற்போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும்

11

# தீர்வு விடயத்தில் தமிழ்க் கட்சிகள் ஒரு தரப்பாக பயணிக்கவேண்டும்!

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 13

தீர்வு விடயத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒருதரப்பாக பயணிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு இனப்

11

# எரிபொருள் நெருக்கடி ஏற்பட வாய்ப்பில்லை!

கொழும்பு, டிசெ. 13

நாட்டில் எரிபொருள் நெருக்கடி ஏற்படுவதற்கான எவ்வித வாய்ப்பும் இல்லை என கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்று ஊடக சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

யுனைடெட் பெற்றோலியம் நிறுவனத்தினால்


11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கூரைமேல் சோலர் அனுமதியில் முறைகேடு நடந்தது உறுதி!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 13

**யாழ்ப்பாணத்தில் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் சோலர் அனுமதி வழங்கல் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணப் பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகம் தவறிழைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட பாவனையாளருக்கு உடனடியாக நீதி வழங்குமாறும் பணித்திருக்கிறது.**

மேலும், பாவனையாளர் ஒருவருக்கு இணைப்பு அனுமதி வழங்குவதற்காகப் பாவனையாளரிடமிருந்து பணம் அறவிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படும் உள்ளக சுற்று நிருபங்கள் அல்லது பொது நடைமுறைகள் மற்றும் ஆவணங்கள் ஏதுமிருப்பின் அது பற்றித் தங்களுக்கு அறியத்தருமாறும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பாவனையாளர் விவகாரங்களுக்கான பணிப்பாளர் யசந்த ரதுவிதான இலங்கை மின்சார சபையின் பிரதம பொறியியலாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் வாரியப்புலம் பகுதியைச் சேர்ந்த மின் பாவனையாளர் ஒருவர் 2023 ஆண்டு விண்ணப்பித்த போது, அவருக்கு அனுமதி வழங்காமல், 2024 ஆம் ஆண்டு விண்ணப்பித்த அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்குச் செல்வாக்கின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாத கட்டடத்துக்கு அனுமதி வழங்கியமை தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, அவருக்கு அனுமதியை வழங்குமாறு பணிக்கப்பட்ட பின்னரும், இணைப்புக்காக ரூபா 11 இலட்சம் செலுத்துமாறு கோரியமையை ஆதாரங்களுடன் மேன்முறையீடு செய்ததை அடுத்தே இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளருக்கு இவ்வாறு பணித்திருக்கிறது.


சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தில் சோலர் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களில் பலருக்கு அனுமதி வழங்கப்படாமை, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர் பொருத்துவதில் பாரபட்சம் காட்டுதல் போன்ற முறைகேடுகள் குறித்து இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கும், மின் சக்தி வலு அமைச்சுக்கும், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இது வரை பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

எனினும், இலங்கை மின்சார சபை அவற்றைக் கண்டும் காணாமல், முறையற்ற விதத்தில் பல அனுமதிகள் வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அனுமதியை வழங்குமாறு உத்தரவிடப்பட்டபோதும், பிராந் திய மின் பொறியியலாளர் அவை குறித்துக் கிஞ்சித்தும் கவனமெடுக்காமல் தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் சோலர் அனுமதிகளை வழங்கி வந்துள்ளார்.

அதைவிட, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர்களைப் பொருத்துவதிலும் முறைகேடாக நடந்து கொண்டுள்ளார் என்று பாவனையாளர்கள் பலர் முறைப்பாடு செய்துமிருந்தனர்.

இதேநேரம் - இணைப்புக்கான அனுமதி வழங்கல் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மின்வலு சக்தி அமைச்சரிடம் நேற்று நேரடியாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில், அனுமதிக்கு விண்ணப்பித்த ஒழுங்கு, அனுமதிக்காகப் பணம் செலுத்திய ஒழுங்கு, அனுமதி வழங்கப்பட்ட ஒழுங்கு உட்பட முறைகேடுகள் நடந்துள்ளன என்பதை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்களை இலங்கை மின்சார சபையிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக வாடிக்கையாளர்கள் பலர் கேட்டிருந்த போதிலும், இது வரை அத்தகைய தகவல்கள் எவையும் வழங்கப்படவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)



# 213 கிலோ கேரளக் கஞ்சாவுடன் காரைநகரில் இருவர் சிக்கினர்!

யாழ்ப்பாணம், டிசெ. 13

213 கிலோ கேரளக் கஞ்சாவுடன் காரைநகரில் மீசாலை பகுதியைச் சேர்ந்த இவர் கைது செய்யப்பட்டனர்.

51ஆவது படைப்பிரிவு இராணுவ முகாமைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, காரைநகர் பகுதியில் வைத்து சாவகச்சேரி - மீசாலை பகுதியைச் சேர்ந்த இந்த சந்தேகநபர்கள் பெருமளவு கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கையின்போது 213 கிலோ 800 கிராம் கஞ்சா மற்றும் படகும் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சான்றுப் பொருட்களுடன் ஊர்காவல்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ- 05)

# முல்லைத்தீவு தியோகுநகர் வழக்கு ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, டிசெ. 13

முல்லைத்தீவு தியோகுநகர் வழக்கு, எதிர்வரும் ஜனவரி மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு தியோகுநகர்ப் பகுதியில், கடந்த மே மாதம் 26 ஆம் திகதி, கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்குரிய, மக்கள் பயன்பாட்டில் உள்ள வீதியை, தனியார் நிறுவனம் ஒன்று வேலியிட்டுத் தடுத்தமையால், அப்பகுதியை சேர்ந்த மக்கள், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் ஒன்றிணைந்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், வீதியைத் தடுத்து அமைக்கப்பட்ட வேலியையும் அப்புறப்படுத்தியிருந்தனர்.

அதனையடுத்து, தனியார் நிறுவனத்தின் முறைப்பாட்டிற்கமைய, முல்லைத்தீவு நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள வழக்கு, நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, எதிர்வரும் ஜனவரி மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

# தென்மராட்சி பிரதேசத்தின் தாழ்நிலப் பகுதி வெள்ளத்தில்

## வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர்



யாழ்ப்பாணம், டிசெ. 13

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக தென்மராட்சி பிரதேசத்தின் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தின் கொடிகாமம் தெற்கு, கொடிகாமம் மத்தி மற்றும் பாலாவி வடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்களே வெள்ள அனர்த்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 34 குடும்பங்களை சேர்ந்த 132 பேர் தற்காலிக முகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாலாவி வடக்கிலுள்ள கலைவாணி முன்பள்ளியில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 38 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 94 தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி வழக்கு பெப்ரவரி 27இற்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, டிசெ. 13

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் காணாமல்போனோர் அலுவலகம் சார்பில் அலுவலகத்தின் சட்டத்தரணி, காணாமல்போனோர் அலுவலகத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய இணைப்பாளர் கிருஷாந்தி ரத்நாயக்க, சட்ட வைத்திய அதிகாரி சார்பாக மருத்துவ அதிகாரி, மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணிகளான கணபதிப்பிள்ளை கணேஸ்வரன், அனித்தா சிவனேஸ்வரன், கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவுக்கு ரூபா 495,000 பெறுமதியான வெள்ள நிவாரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு - மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட செய்யப்பட்ட 165 குடும்பங்களுக்கு 4இலட்சத்து 95 ஆயிரம் ருபா பெறுமதியான வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன

இம்மாவட்டத்திலுள்ள வற்றாப்பளை, முள்ளியவளை, கோப்பாப்பிலவு, ஐயனார் குடியிருப்பு, விசுவமடு, ரெட்பானா ஆகிய 6 கிராமங்களிலிருந்து தெரிவானவர்களுக்கே இவ்வுதவிகள் கையளிக்கப்பட்டன.

வற்றாப்பளையில் வைத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் [illegible]தாஸ்



சுவாமிகள் தலைமையிலான தொண்டர் குழுவினர் அத்தியாவசிய உணவுப்பொருட்களைக் கொண்ட நிவாரனப்பொதிகளை வழங்கினார்கள். (அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
13.12.2024 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலில் மூத்தவர்களின் ஒய்வு

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார். இந்த விடயம் அப்போது ஊடகங்களில் பிரசுரமாகியிருந்தது. தற்போது, அந்த நிலைப்பாட்டில் தொடர்ந்தும் இருக்கின்றீர்களா என்பதை அறியும் நோக்கில், கட்சியின் செயலாளர் கடிதமொன்றை அனுப்பியிருக்கின்றார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியைப் பொறுத்தவரையில் மாவை சோனாதிராசா ஒரு மூத்த தலைவர். சம்பந்தனுக்கு அடுத்த நிலையில் அந்த கட்சியை வழிநடத்தியிருக்க வேண்டியவர் - ஆனால், நாடாளுமன்றத் தேர்தலில் மாவை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பெருமளவுக்கு அவர் கட்சிக்குள் முக்கியத்துவமற்ற ஒருவராக மாறிவிட்டார்.

சம்பந்தன் இருக்கின்றபோது கூட, மாவையின் குரலுக்கு கட்சிக்குள் பெரியளவில் செல்வாக்கு இருந்ததில்லை. வடக்கு முதலமைச்சர் வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரனை கொண்டு வந்த விடயம் தொடக்கம், தேசிய பட்டியல் ஆசனத்தில் திட்டமிட்ட புறக்கணிப்பு வரையில், மாவை சேனாதிராசாவை கட்சிக்கு தேவையான ஒருவராக தற்போதுள்ள தமிழ் அரசு கட்சிக்காரர்கள் கருதவில்லை.

மாவை சோனாதிராசா இலங்கை தமிழ் அரசு கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபட்ட ஒருவர். சம்பந்தன் எப்போதும் தன்னை உயர்ந்த நிலையில் பேணிக் கொள்ளும் ஒருவராகவே இருந்திருக்கின்றார் - இதன் காரணமாகத்தான் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய திருகோணமலையில் கூட அக்கறையில்லாத ஒருவராக இருந்தார் - ஆனால், ஒவ்வொரு மாவட்டங்கள் தோறும் கட்சியை பாதுகாத்து, இன்றும் தமிழ் அரசு இருக்கின்றது என்றால் அதற்கு மாவைதான் பிரதான காரணம் ஆனால், மிகவும் குறுகிய காலத்திற்குள் கட்சியில் இணைந்தவர்கள் கூட, மாவை போன்றவர்கள் தேவைதானா என்று கேட்குமளவுக்கே, அவரது இன்றைய அரசியல் முக்கியத்துவம் இருக்கின்றது.

தமிழர் (தேசிய) அரசியலில் இரண்டாம் மட்ட தலைமை என்பது எந்தவொரு கட்சியிலும் இல்லை. இன்றுள்ள கட்சிகளில் ஒப்பீட்டடிப்படையில் ஒரு கட்டமைப்போடு இருக்கின்ற கட்சியென்றால் அது இலங்கை தமிழ் அரசு கட்சி மட்டும்தான். இதற்கு காரணம் 1990களுக்கு பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்ட எந்தவொரு முன்னாள் இயக்கங்களுக்கும் வடக்கு, கிழக்கில் அரசியல் கட்டமைப்புக்கள் இல்லை. அவ்வாறானதொரு கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்னும் தூர நோக்கில் அவர்கள் செயல்படவும் இல்லை. வெறுமனே ஒரு சிலருக்கு கதிரைகள் கிடைத்தால் போதும் என்னும் மனோநிலையிலேயே செயல்பட்டனர். இதன் விளைவுதான், போட்டிக் கட்சிகளற்ற நிலையில் தமிழ் அரசு கட்சி மட்டும் ஒரு கட்டமைப்போடு இயங்க முடிகின்றது.

அரசியல் எப்போதும் மாற்றங்களுக்குரியது. மாற்றங்கள் அரசியல் விடயங்களில் மட்டுமல்ல, அந்த அரசியலை கையாளும் நபர்களிலும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதது. இதனை புரிந்து கொண்டு புதியவர்களுக்கு இடமளிக்கும் நோக்கில், மூத்தவர்கள் மற்றும் நீண்டகாலமாக கட்சிகளின் தலைமைப் பொறுப்பை தங்கள் வசம் வைத்திருந்தவர்கள் ஒதுங்கி, மற்றவர்களுக்கு வழிவிட வேண்டியது அவசியம். அப்படியில்லையென்றால் குறித்த கட்சி ஒரு போதும் வளர்ச்சியடைய முடியாது. அரசியல் கட்சிகள் என்றால் அது இயங்கு நிலையில் இருக்க வேண்டும்.

# பால்நிலை சமத்துவம், ஒப்புரவு குறித்த இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு

## யாழ். பல்கலையில் சிறப்பாக நடைபெற்றது







யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவம் பற்றிய இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

"பால்நிலையை முதன்மைப்படுத்துவதற்கான பல்துறைசார்ந்த மற்றும் ஒன்றிணைந்த முன்னோக்குகள்" என்ற தொனிப் பொருளுடன் நடைபெற்ற இந்த "வியோமம்" சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையப் பணிப்பாளரும், சந்தைப்படுத்தல் துறைத் தலைவருமான பேராசிரியர் எஸ். சிவாணி தலைமையில் நடைபெற்றது.

துணைவேந்தர், பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட பால்நிலை ஆலோசகரும், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானங்கள் பீடாதிபதியுமான கலாநிதி மனோஜ் பெர்னாண்டோ, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோட்டா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தில் அமைந்துள்ள தர்மம் நிலையத்தின் பணிப்பாளரும், சட்டவாளருமான நகுலேஸ்வரன் தர்மலிங்கம் ஆகியோர் திறவு உரையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

மாநாட்டுக்கு முன்னதாக, பால்நிலை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கண்காட்சி ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கண்காட்சியில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பால்நிலை வன்முறை குறித்த 56 உண்மைச் சம்பவங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மிக முக்கிய அம்சமாக தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாற்றுத்திறனாளி மாணவர்களின் நடன நிகழ்வு நடைபெற்றது.

ஆய்வு மாநாட்டுத் திறவுரைகளைத் தொடர்ந்து, ஆய்வுக் கட்டுரைகள், அனுபவப் பகிர்வுகள் மற்றும் செய்தி மடல் வெளியீடு இடம்பெற்றதுடன், வடக்கு மாகாணத்தில் பால்நிலை சமத்துவத்தை முதன்மைப்படுத்துவதற்காகத் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், பால்நிலை மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் சமூக மட்டப் பிரதிநிதிகள், பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், அரசாங்க அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# வடக்கு காணி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சியில் நேற்றுத் திறந்து வைப்பு

கிளிநொச்சி, டிசெ. 13

வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்குரிய அலுவலகம் நேற்று கிளிநொச்சியில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும், யாழ்ப்பாணத்தில், தற்காலிக இடத்தில் இயங்கி வந்த மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு, கிளிநொச்சியில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு நேற்று திறப்பு விழா இடம்பெற்றது.


பிரமாண அடிப்படையிலான குறித்தொதுக்கப்பட்ட 75 மில்லியன் ரூபா நிதியில், புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகம், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

பால் காய்ச்சி, சம்பிரதாயபூர்வமாக கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

அதனால், எதிர்வரும் ஜனவரி மாதம் மூன்றாம் திகதி முதல், கிளிநொச்சியில் உள்ள அலுவலகத்தில் இருந்து, மக்கள் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 13 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 28
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திரயோதசி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. அவசர முடிவுகளை தவிருங்கள். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உறவினர் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வை பாராட்டுவீர்கள். காணாமல்போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள்.

**கடகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களை கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். பிள்ளைகளிடம் கோபத்தை காட்டாதீர்கள். அலட்சியம் வேண்டாம்.

**துலாம்**
மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிடைக்கும்.

**விருச்சிகம்**
சமயோசிதமாக சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். பண விஷயத்தில் கறாராக இருங்கள்.

**தனுசு**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். ரெட்டிப்பு லாபம் உண்டு.

**மீனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

# நுண்நிதிக் கடன்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்

## ஆளுநரிடம் யு. என். டி. பி. பிரதிநிதி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 13
வடமாகாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஆளுநரிடம் எடுத்துக்கூறிய யு. என். டி. பி. வதிவிடப் பிரதிநிதி, நுண்நிதிக் கடன்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் தேவைப்பாடுகள் தொடர்பிலும், யு. என். டி. பி. நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும், யு. என். டி. பி. நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி அஷூசா குபோடாவுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

உள்ளூராட்சி அமைப்புகளை வலுப்படுத்தும் தமது வேலைத்திட்டம் தொடர்பாக விரிவாக வதிவிடப் பிரதிநிதியால் ஆளுநருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நிகழ்நிலைப்படுத்துவதன் தேவைப்பாடு மற்றும் அதனால் ஏற்படும் சாதகமான நிலைமைகள் தொடர்பிலும் குறிப்பிட்ட ஆளுநர், வடக்கு மாகாணத்திலும் அது நடைமுறைப்படுத்தப்படுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் உட்பட பல்வேறு உதவிகளை யு. என். டி. பி. நிறுவனமும் ஐ. நா. முகவர் அமைப்புகளும் வழங்கியமைக்கு ஆளுநர் நன்றி தெரிவித்தார்.

அண்மையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் மீளக் குடியமர்வதற்குரிய தேவைப்பாடுகளையும் ஆளுநர் குறிப்பிட்டார். வடக்கு மாகாணத்தின் மிக முக்கியமான விவசாயம் மற்றும் மீன்பிடி பொருளாதார மேம்பாட்டுக்கான உதவிகளின் தேவைப்பாடுகளையும் ஆளுநர் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தினார்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் தாம் கேட்டறிந்த விடயங்களை ஆளுநருடன் பகிர்ந்துகொண்ட யு. என். டி. பி. வதிவிடப் பிரதிநிதி, நுண்நிதிக் கடன்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்கு மாகாணத்தில் யு. என். டி. பி. நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு அறிக்கையையும் ஆளுநரிடம் அவர் கையளித்தார்.

(எ- 02)

# இந்திய மீனவர்கள் 9 பேர் விடுதலை ஒருவருக்கு ரூ. 35 இலட்சம் அபராதம்

யாழ்ப்பாணம் டிச 12
இந்தியா மீனவர்கள் 9 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதோடு, படகு ஓட்டுநருக்கு 35 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நாகபட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடிக்க வந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி கடற்படையின் ரோந்து படகு மீது இந்திய இழுவைப்படகு மோதியதில் கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார். இது தொடர்பில் 10 மீனவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

இந்த நிலையில், மீண்டும் வழக்கை விசாரித்த நீதிபதி சுபரஞ்சனி ஜெகநாதன் 9 மீனவர்களை நிபந்தனையுடன் விடுதலை செய்து உத்தரவிட்டார். நடுக்கடலில் படகு மோதி ஏற்பட்ட விபத்தில் கடற்படை வீரர் உயிரிழந்ததால் அவரது குடும்பத்துக்கு 10 இலட்சம் ரூபாய் இழப்பீடும், கடற்படை ரோந்து படகு சேதமடைந்ததால் 25 இலட்சம் ரூபாய் இழப்பீடு என மொத்தமாக 35 இலட்சம் ரூபாய் அபராதத் தொகையை படகு ஓட்டுநர் கட்ட வேண்டும் எனவும் அபராதத் தொகையை கட்டத் தவறும்பட்சத்தில் படகு ஓட்டுநருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என நீதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை, விடுதலை செய்யப்பட்ட 9 மீனவர்களை மெரிகான சிறப்பு முகாமுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. படகு ஓட்டுநர் மீண்டும் யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

(எ- 02)

# அபிவிருத்தி திட்டங்களின் மீளாய்வுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 13
பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது.

பதில் அரசாங்க அதிபர் கூறுகையில், வேலைத்திட்டங்களை குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சவால்களை ஏற்று தற்துணிவின் அடிப்படையில் செயல்பட்ட மாவட்ட செயலக பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள், பிரதி உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் ஏனைய உத்தியோகத்தர்களையும் பாராட்டுகின்றேன். குறிப்பாக, இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் தொடர்பில் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் கடும் முயற்சிகள் எடுத்துவருவது எமது இளைஞர் சமுதாயத்துக்கு ஆரோக்கியமான விடயம். இந்த விளையாட்டு உபகரணங்களின் பாவனை தொடர்பாக பிரதேச செயலக ரீதியாக கண்காணிப்பு அவசியமானது. வேலைத்திட்டங்களில் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படுவதாகவும் பிரதீபன் குறிப்பிட்டார்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புள்ளிவிவர குடிசன தொகைமதிப்பிடும் கணிப்பீட்டில் காரைநகர், வேலணை, சங்கானை மற்றும் கோப்பாய் பிரதேச செயலகங்கள் இதுவரை பூர்த்தி செய்துள்ளதாகவும் பதில் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து, நலன்புரி நன்மைகள் (அஸ்வெசும) தொடர்பான



திட்டங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதம கணக்காளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அஸ்வெசும திட்டத்துக்குப் பொறுப்பான மாவட்ட ஒருங்கிணைப்பாளர், பிரதேச செயலக பிரதிநிதிகள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தலுக்கு தேசப்பற்று கூட்டணியை அமைக்கின்றார் விமல்!

## மாகாண சபைத் தேர்தலிலும் போட்டி

கொழும்பு, டிசெ. 13

**உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்குவதற்காக விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியில் தலைமையின் கீழ் தேசப்பற்று கூட்டணியொன்று ஸ்தாபிக்கப்படும் என்று முன்னணியின் பிரதித் தலைவர் முன்னாள் எம்.பி. ஜயந்த சமரவீர தெரிவித்தார்.**

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தேசிய சுதந்திர முன்னணியின் ஏற்பாடு பற்றி எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் மேலும் கூறியவை வருமாறு- உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய சுதந் திர முன்னணி தலைமையிலான கூட்டணியில் போட்டியிடுவோம். அதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுவருகின்றது. விலைபோகாத தரப்புகளை உள்ளடக்கிய தேசியப்பற்றுள்ள கூட்டணியாக செயற்படுவோம்.

அதேவேளை மாகாணசபைத் தேர்தலிலும் போட்டியிடுவோம்." - என்றார். (அ)

# மின் கட்டண திருத்த யோசனை; ஜனவரி 17 இல் இறுதி தீர்மானம்!

கொழும்பு, டிசெ. 13

இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மின்சார கட்டண திருத்த யோசனை தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானம் 2025 ஜனவரி 17 ஆம் திகதி எடுக்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையினால் 2025 ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான 6 மாத காலத்வ/ஹக்கு முன் வைக்கப்பட்ட மின்சாரக் கட் டண திருத்த முன்மொழிவுக் கான பொது கலந்தாய்வு 2025 டிசெம்பர் 17 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் இலங்கை பொதுப் பயன்பா டுகள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இதற்காக ஜனவரி 08 ஆம் திகதி வரை எழுத்துபூர்வ கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்துப்பூர்வ கருத்துக்களை ைகெழஞிரஉளட.பழஎ.டம என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 076 427 1030 என்ற வாட்ஸ்அப் இலக்கத்திற்கு அல்லது தபால் மூலம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பலாம். (அ)

# வருடாந்த ஊக்குவிப்பு வழங்கப்படாமைக்கு மின்சார சபைத் தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ. 13

இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படாமைக்கு மின்சார சபை தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதால் மின் கட்டணக் குறைப்புக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்குக் கடந்த இரண்டு வருடங்களாக ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

எனவே, டிசெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் கட்டாயமாக அவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென.

இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் இந்த கோரிக்கைக்கு மின்சார சபையின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கவில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒரு லட்சம் குரங்குகளை சீனாவுக்கு வழங்குங்கள்!

## கோருகிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, டிசெ. 13

ஒரு லட்சம் குரங்குகளை சீனாவிலுள்ள மிருகக்காட்சிச்சாலைகளுக்கு வழங்குவதற்கு தம்மால் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தை தற்போதைய அரசாங்கம் செயல்படுத்த வேண்டும் என்று முன்னாள் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-நாட்டில் தேங்காய் விலை அதிகரித்துள்ளது. வருடாந்தம் 200 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய்களை குரங்குகள் நாசமாக்கின்றன. எனவே, இந்நிலைமையை கட்டுப்படுத்த வேலைத்திட்டமொன்று அவசியம்.

ஒரு லட்சம் குரங்குகளை சீனாவிலுள்ள மிருகக்காட்சி சாலைகளுக்கு வழங்கும் திட்டத்தை நாம் செயற்படுத்த தயாரானவேளை சுற்றாடலியலாளர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களிடம் உரிய மாற்று திட்டம்கூட இல்லை. நடைமுறைக்கு சாத்தியமற்ற தீர்வுகளே அவர்கள் வசம் உள்ளன.

எனவே குரங்குகளை சீன மிருக்காட்சிச்சாலைக்கு அனுப்பும் திட்டத்தை முன்னெடுக்குமாறு தற்போதைய அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றேன்-என்றார். (அ)

# சட்டவிரோதமாக மாடுகளை கடத்தியோர் வீதியில் லொறியை விட்டு தப்பியோட்டம்!

கொழும்பு, டிசெ. 13

அம்பாந்தோட்டை, வீரகெட்டிய, யக்கஸ்முல்ல பிரதேசத்தில் சட்டவிரோதமாக 26 மாடுகளை லொறியில் கொண்டு சென்ற சந்தேக நபர்கள் பொலிஸார் கைது செய்யச் சென்ற வேளை தப்பிச் சென்றுள்ளதாக அம்பலாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

அம்பலாந்தோட்டை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் யக்கஸ்முல்ல பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாடுகளை கொண்டு சென்ற லொறி ஒன்றை நிறுத்த முயன்றபோது அது பொலிஸ் உத்தரவையும் மீறி வேகமாகச் சென்றுள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் லொறியை பின்தொடர்ந்து துரத்திச் சென்றபோது லொறியில் இருந்த சந்தேக நபர்கள் லொறியை வீதியில் விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸ் அதிகாரிகள் லொறியை கைப்பற்றி அதில் இருந்த 26 மாடுகளில் ஆறு மாடுகள் உயிரிழந்திருப்பதை கண்டுபிடித்தனர்.

சந்தேக நபர்களை கைது செய்வது தொடர்பில் அம்பலாந்தோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# 130 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 13

கஹதுடுவ பகுதியில் 05 கிலோ ஹெரோயின், 1.6 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 800 எக்ஸ்டஸி மாத்திரைகளை வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.


கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதியானது சுமார் 130 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பொரளை, வனத்தமுல்ல பிரதேசத்தில் 02 கிலோ 100 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.கைது செய்யப்பட்ட சந் தேக நபர் முல்லேரிய பகுதி யைச் சேர்ந்த 20 வயதுடையவர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தேசிய பட்டியல் ஆசன முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்!

## அசாத் சாலி கோரிக்கை



கொழும்பு, டிசெ. 13

தேசியப்பட்டியல் ஆசன முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என முன்னாள் மேல்மாகாண ஆளுநர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்புரிமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கப்பெறுவதில் எமக்கு எந்த பிரச்னையும் இல்லை. ஆனால் திருடருக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் விமர்சிக்கின்றனர்.

அந்த வகையில் நோக்கும் போது இதில் பாரிய சிக்கல் நிலை காணப்படுகின்றது என்றே கூற முடியும். அனைத்துக் கட்சிகளுக்கும் தத்தமது கட்சிகளின் தேசியப்பட்டியல் உறுப்பினர்களை தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்த முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்.

புதிய ஜனநயாக முன்னணியின் எஞ்சிய தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு பைசர் முஸ்தபாவின் நியமனத்திற்கு நாம் எதிர்ப்பை வெளியிடவில்லை. மாறாக அந்த நியமனங்கள் குறித்த விடயம் தொடர்பில் அனைவருக்கும் அறிவிக்கப்படவேண்டியது அவசியமாகும்-என்றார். (அ)

# கலாநிதி பட்டம் தொடர்பில் விளக்கம் அளிக்கவேண்டும்

## இல்லையேல் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

கொழும்பு, டிசெ. 13

சபாநாயகரின் கலாநிதி பட்ட விவகாரம் தொடர்பில், சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர எதிர்பார்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

சபாநாயகரின் கலாநிதி பட்டம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியோ அல்லது சபாநாயகரோ விளக்கம் அளிக்க வேண்டும் எனவும், அவ்வாறு செய்யாவிட்டால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்துரையாடி சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவோம் என அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். (அ)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது!

கொழும்பு, டிசெ. 13

நொச்சியாகம - ரனோராவ பிரதேசத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப் பட்ட துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நொச்சியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேநபர்கள் 33 மற்றும் 34 வயதான தலாவ மற்றும் காலதிவுல்வெள பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைபாடுகளை மறைக்கும் முயற்சியில் அநுரகுமார அரசு

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 13

**அரசாங்கம் தமது குறைபாடுகளை மறைக்க முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை குறைக்கும் விடயத்தை கையில் எடுத்துள்ளதாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஹெரண தொகுதி அமைப்பாளர் திலிப் வீரக்கொடி தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சி கவிழ்ப்பு இடம்பெற்ற தருணத்தில் நாட்டில் பொருட்களின் விலை சாதாரண மட்டத்திலேயே காணப்பட்டது. அந்த வகையில் நாட்டு மக்களால் மகிழ்ச்சியாக வாழ முடிந்த சூழல் காணப்பட்டது.

ஆனால் நாட்டினுள் பொய்யுரைத்து மக்களின் மனதை மாற்றி நாட்டினுள் குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணியினர் முன்னெடுத்திருந்தனர். பொய்யின் ஊடாக ஏமாற்றப்பட்டுள்ள மக்களுக்கு தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று தன்னால் கூறப்பட்ட பொய்களை யதார்த்தமாக்க முடியாது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிந்து கொள்ள வேண்டும். மறுபுறம், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தமது குறைபாடுகளை மறைக்க இத்தகைய விடயங்களை நாட்டினுள் பேசுபொருளாக மாற்ற எத்தனிக்கின்றனர்.

எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படும் நாடு உருவாகும் என்ற நம்பிக்கையிலேயே நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்தனர்.

ஆனால் அதனை இந்த அரசாங்கம் நிறைவேற்றுவதாக தெரியவில்லை-என்றார்.

# அசாத் சாலி கைது சட்டவிரோதமானது

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, டிசெ. 13

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

மேலும் நட்டஈடாக பிரதிவாதிகள் 75,000 ரூபா செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிரதிவாதிகளில் முன்னாள் பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் அடங்குவர்.

ஆசாத் சாலி 2021 மார்ச் 9 அன்று செய்தியாளர் சந்திப்பில் மதங்களுக்கு இடையே முறுகலை ஏற்படுத்தும் வகையில் பேசினார் என்ற குற்றச்சாட்டுக்காக 2021 மார்ச் 16 அன்று கைது செய்யப்பட்டார்.

ஏறக்குறைய ஒன்பது மாதங்கள் தடுப்புக்காவலில் இருந்த பின்னர், 2021 டிசெம்பர் 2 அன்று கொழும்பு மேல் நீதிமன்றினால் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார்.

(அ)

# நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட எந்த காரணமும் இல்லை!

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 13

நாட்டில் அரிசித்தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எந்த காரணமும் இல்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் அரிசித்தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எந்த காரணமும் இல்லை என்றே கூற முடியும்.

எம்முடைய நாட்டில் ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிலையம் உள்ளது. அதே போன்று விவசாயத்துறை அமைச்சு உள்ளது.

புள்ளிவிபரவியல் திணைக்களம் மற்றும் மத்திய வங்கியும் எம்முடைய நாட்டில் உள்ளன.

இவை அனைத்தின் தரவுகளுக்கு அமைய கடந்த பெரும்போகத்தில் 4.6 மில்லியன் மெற்றிக்தொன்னிலிருந்து 5.5 மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக தரவுகள் கூறுகின்றன. இத்தகைய பின்னணியில் அவற்றை அரிசியாக மாற்றினாலுமே கூட நாட்டில் அரசிக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எந்த காரணமும் இல்லை.

100 கிலோ நெல்லில் 62.5 கிலோகிராம் அரிசியை பெற முடியும் என அரிசி ஆலை உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

அத்துடன், 100 கிலோ நெல்லில் 68 கிலோகிராம் அரிசியை பெற முடியும் என விவசாயத் துறை அமைச்சு கூறுகின்றது. சிறிய அரிசி ஆலை உரிமையாளர்கள் 52 கிலோகிராம் அரிசியை பெற முடியும் என கூறுகின்றனர். இந்த தரவுகளின் அடிப்படையில் எடுத்து நோக்கும் போது நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எந்த காரணமும் இல்லை என்றே கூற முடியும்.

இத்தகைய பின்னணியில் அரிசியை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினருக்கு உரிய அனுபவம் இல்லை என்றே கூற முடியும்-என்றார். (அ)

# அரச அதிகாரிகள் கருணையுடன் செயற்படவேண்டியது அவசியம்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, டிசெ. 13

நாட்டிலுள்ள பொது மக்கள் அரச சேவையை எதிர்பார்த்து வரும்போது அவர்கள் கண்ணீருடன் செல்வதை அவதானிக்க முடிந்துள்ளதாகவும் எனவே பொது சேவைகளை வழங்கும் அதிகாரிகள் பொது மக்களிடம் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான மூலோபாயங்களை வகுத்தல்' என்ற தலைப்பில் கொழும்பு இலங்கை மன்றத்தில் விசேட கருத்தரங்கொன்று நேற்று இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் ஹரிணி அமரசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-கல்வி என்பது மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதை நாம் அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அறிவைப் பெறுவதற்கு அப்பால், தனிப்பட்ட மற்றும் ஒரு கூட்டு மாற்றமாக ஒரு சமூக மாற்றம் நிகழ வேண்டும். அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கல்விமுறையை நாம் கொண்டிருக்க வேண்டும்.

சமூகப் பொறுப்பை உணர வேண்டும். தனிப்பட்ட ரீதியில் மட்டுமன்றி, ஒரு சமூகமாகவும் எழுச்சிபெற வேண்டும்.

அதற்கான சமூகப் பொறுப்பு உள்ளது என்பதை உணர வேண்டும். கல்வி ஒரு வர்த்தகப் பண்டம் அல்ல. நாம் கல்வியை ஒரு வர்த்தக பண்டமாக மாற்றியுள்ளோம். இந்த கலாசாரத்தை மாற்ற வேண்டும். நாம் ஓரிரு வாரங்களில் முடிவுகளை எதிர்பார்த்து கல்வியில் முதலீடுகளை செய்யவில்லை.

இது ஒரு நீண்ட கால முதலீடாகும், அந்த முதலீட்டை அரசாங்கம் செய்யும். கல்வி அமைச்சும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களும் கல்வி தொடர்பான கொள்கை முடிவுகளை எடுக்கும் இடமாக மாற வேண்டும். அந்தக் கொள்கைகள் மற்றும் முடிவுகள் தரவுகளின் அடிப்படையில் இருக்க வேண்டும். அதிகாரிகளிடம் கருணை இருக்க வேண்டும்.

சேவையை எதிர்பார்த்து வருபவர்கள் அழுதுகொண்டு செல்வதைப் பார்க்கிறோம். அதிகாரிகள் அவர்களுக்கு செவிசாய்ப்பதில்லை, சரியாக பேசுவதில்லை, கேள்வி கேட்டால் பதில் சொல்வதில்லை. ஒரு விடயத்தை பல ஆண்டுகளாக இழுத்தடிப்புச் செய்வதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்த முறையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

(அ)

# வாகன விபத்தில் சார்ஜன்ட் மரணம்!

கொழும்பு, டிசெ. 13

கெக்கிராவ - தம்புள்ளை வீதியில் மிரிஸ்கோனியா பகுதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் சார்ஜன்ட் பயணித்த கப் வாகனம், பயணிகள் போக்குவரத்து பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே உயிரிழந்தவர் ஆவார்.

உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்ட் மாத்தளை மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றிற்காக ஆஜராகி கெக்கிராவ பொலிஸ் நிலையத்திற்கு திரும்பிச் செல்லும் வழியிலேயே விபத்துக்குள்ளானார்.

மேலும், விபத்தில் கப் வண்டியின் சாரதியும் படுகாயமடைந்துள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்து தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சாதனை படைத்துள்ளது அம்பேவெல பண்ணை!

கொழும்பு, டிசெ. 13

அம்பேவெல பண்ணை நாளொன்றுக்கு 62,000 லீற்றர் பாலை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.

அதன்படி, இது நாளொன்றுக்கு 3,000 லீற்றரில் இருந்து 60,000 லீற்றராக பாரிய அதிகரிப்பை பிரதிபலிக்கிறது.

2001இல் பொதுப்பணித் துறை கையகப்படுத்தியபோது, தினசரி உற்பத்தி 3000 லீற்றர் பால் குறைவாக இருந்தது. தற்போது இந்த பண்ணையானது இலங்கையின் தேசிய விநியோகத்திற்கு ஏறத்தாழ 20 மில்லியன் லீற்றர் பாலை வழங்குகிறது.

2019 இல் 5 பில்லியன் ரூபாய் முதலீடு மற்றும் நவீனமயமாக்கல் மூலம், உற்பத்தி திறன் இரண்டு ஆண்டுகளுக்குள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. மேலும், மேம்பட்ட இனப்பெருக்கத் திட்டங்கள் உள்நாட்டில் அதிக மகசூல் தரும் மாடுகளை உற்பத்தி செய்வதை சாத்தியமாக்கியுள்ளன.

உலகெங்கிலும் உள்ள சிறந்த வணிக மந்தைகளுடன் ஒப்பிடக்கூடிய நாட்டின் மரபணு ரீதியாக உயர்ந்த பசுக்கள், 305 நாட்களில் 12,000 லீற்றர் பால் உற்பத்தி செய்கின்றன.

மேலும், கடுமையான சுகாதார கண்காணிப்பு நடவடிக்கைகள், பசுக்கள் ஆரோக்கியமாகவும் நோயற்றதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. சர்வதேச ஊட்டச்சத்து நிபுணர்களின் வழிகாட்டுதலுடன், மாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட துல்லியமான உணவு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

கூடுதலாக, பண்ணை மேய்ச்சல் நிலங்களில் வளர்க்கப்படும் இறக்குமதி செய்யப்பட்ட புற்கள் உணவளிக்கப்படுகிறது (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகர் உள்ளிட்ட அரசமைப்பு பேரவை அடிப்படை உரிமையை மீறி நடக்கவில்லை!

## உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

கொழும்பு, டிசெ. 13

**மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதிபதி நிஷ்ஷங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரையை நிராகரித்ததன் மூலம் சபாநாயகர் உள்ளிட்ட அரசியலமைப்பு பேரவை அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.**

உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி, குமுதினி விக்ரமசிங்க ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டத்தரணி பத்திரத்னவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உறுதிசெய்வதற்கு அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதம நீதியரசரைத் தவிர உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரை நியமிக்கவோ அல்லது முன்மொழியவோ ஜனாதிபதிக்கு தடை விதித்து இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனினும் முறையான நடைமுறைகளைப் பின்பற்றாது ஜனாதிபதியால் உயர் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட நீதியரசரின் நியமனத்தை அரசியலமைப்பு பேரவை நிராகரித்தன் மூலம், அரசியலமைப்பின் 12ஃ1 சரத்தின் கீழ் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதற்கு நீதியரசர்கள் குழாம் விசாரணைக்கான அனுமதியை வழங்கியது.

அதற்கமைய மனு மீதான விசாரணையை ஜூலை 25ஆம் திகதி நிறைவு செய்த நீதியரசர்கள் குழாம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷ்ஷங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவையிடம் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை நிராகரிப்பதற்கு அரசியலமைப்பு பேரவையின் பெரும்பாலான உறுப்பினர்கள் எடுத்த தீர்மானம் சரியானதென நீதியரசர்கள் நேற்று உத்தரவிட்டது.

இதனால் அரசியலமைப்பு பேரவையின் தீர்மானத்திற்கமைய அரசியலமைப்பு மீறப்படவில்லை என உத்தரவிட்ட நீதியரசர்கள் குழாம், 20 இலட்சம் ரூபா வழக்கு கட்டணத்திற்கு உட்பட்டு மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது.

சட்ட மாஅதிபர், சபாநாயகர், பிரதமர், அரசியலமைப்பு பேரவை உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்கா டி சில்வா ஆஜரானார்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா முன்னிலையானார். (அ)

# அசோக ரன்வலவின் கலாநிதிப் பட்டம் நீக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை!

கொழும்பு, டிசெ. 13

பாராளுமன்ற உத்தியோகபூர்வ வலைத்தளத்தின் விவரத் திரட்டு கோவையில் சபாநாயகர் அசோக ரன்வலவின் கலாநிதி பட்டம் நீக்கப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றத்தில் உள்ளக மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

சபாநாயகர் அசோக ரன்வல தனது கலாநிதி பட்டத்தின் சான்றிதழை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும், அல்லது தவறை ஏற்றுக் கொண்டு கௌரவமான முறையில் பதவி விலக வேண்டும். நாட்டின் மூன்றாம் பிரஜையாக கருதப்படும் சபாநாயகர் ஒட்டுமொத்த மக்களுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தனது உத்தியோக பூர்வ முகப்பு புத்தகத்தில் கடந்த வாரம் " சபாநாயகர் தனது கலாநிதி பட்டம் தொடர்பான விவரங்களை பகிரங்கப்படுத்த வேண்டும். இல்லையேல் பதவி விலக வேண்டும்" என பதிவேற்றம் செய்திருந்தார்.

அதேபோல் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு முன்னின்று செயற்பட்ட ஒரு சில பேராசியர்கள் மற்றும் சிவில் அமைப்பினர்கள் சபாநாயகரின் கலாநிதிப் பட்டத்தை சவாலுக்குட்படுத்தி தமது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களில் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இவ்வாறான பின்னணியில் பொது நிகழ்வில் ஒன்றில் கலந்துக் கொண்டிருந்த சபாநாயகர் அசோக்க ரன்வலவிடம் இவ்விடயம் குறித்து ஊடகங்கள் வினவியபோது தன்னிடம் இரண்டு கலாநிதி பட்டங்கள் இருப்பதாகவும், முன்வைக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு தற்போது பதிலளிக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று குறிப்பிட்டிருந்தார்.

சபாநாயகரின் கலாநிதி பட்டம் அரசியல் களத்தில் பிரதான பேசுபொருளானதன் பின்னர் பாராளுமன்ற உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பாராளுமன்றத்தில் விபர கோவை பகுதியில் "கலாநிதி கௌரவ அசோக ரன்வல" என்ற பதிவு நீக்கப்பட்டு "கௌரவ சபாநாயகர் அசோக்க ரன்வல" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# 40 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 13

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 40 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் துபாயிலிருந்து நேற்று அதிகாலை 12.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது டன், இவர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு விமான நிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# விபத்தில் ஒரே குடும்பத்தில் மூவர் காயம் சிறுமி பலி!

கொழும்பு, டிசெ. 13

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பின்னதுவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளதுடன் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 100 எல் மற்றும் 100.1 எல் இடையே கொட்டாவவயில் இருந்து பலத்துவ நோக்கி சென்ற கார் ஒன்று அதே திசையில் பயணித்த லொறியின் பின் பகுதியில் மோதி இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காரில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் இரு மகள்கள் படுகாயமடைந்தது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது, சிறுமி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மாத்தறை பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 10 வயதுடைய சிறுமேயே உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ரணில் சேகரித்து வைத்த அரிசியைக் கூட அநுரகுமார விநியோகிக்கமுடியாதுள்ளார்!

## சமன் ரத்னப்பிரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 13

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மேசையில் தட்டி, அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அரிசி விலையை 10 ரூபாவால் அதிகரித்து வழங்கியிருக்கிறார். அரிசி ஆலை உரிமையாளர்களை மண்டியிடச் செய்வதாக தெரிவித்துவந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, தற்போது அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அரிசி விலையை 10 ரூபாவால் அதிகரித்து அவர்களுக்கு முன்னால் மண்டியிட்டுள்ளார் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தொழிற்சங்க உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரிசி ஆலை உரிமையாளர்கள் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் அரிசியை சந்தைக்கு விடுவிக்கா மலிருந்ததால் நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

அத்துடன் அரிசி விலையும் ஒரு கிலோ 260 ரூபா வரை அதிகரித்தது. இதனை கட்டுப்படுத்துவதாகத் தெரிவித்து ஜனாதிபதி அரிசி ஆலை உரிமையாளர்களுடன் கலந்துரையாடி அரிசிக்கு விலை நிர்ணயம் செய்வதாக தெரிவித்து, மேசையில் தட்டி, ஒரு கிலோவுக்கு 10 ரூபா அதிகரித்துள்ளார்.

ஜனாதிபதி இதன் மூலம் அரிசி ஆலை உரிமையாளர்களிடம் இருக்கும் அரிசியை வெளியில் கொண்டுவர முடியாமல் அவர்களுக்கு கிலோவுக்கு 10 ரூபா அதிகரித்து மண்டியிட்டுள்ளார்.

அத்துடன் அரிசி இறக்குமதி செய்வதாக இருந்தால் அரசாங்கம் ஒன்று எதற்கு என கேட்ட தேசிய மக்கள் சக்தி, தற்போது அரிசி தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்த 70 ஆயிரம் கிலோ அரிசி இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளது. ஆனால் இறக்குமதி செய்யும் அரிசியை அரசாங்கம் எத்தனை ரூபாவுக்கு இறக்குமதி செய்கிறது? மக்களுக்கு எத்தனை ரூபாவுக்கு வழங்கப்போகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

இந்தியாவிலிருந்து சுவர்ன அரிசியை இறக்குமதி செய்யப்போவதாகவே அரசாங்கம் தெரிவித்திருந்தது. இந்தியாவில் இந்த அரிசி ஒரு கிலோ 30 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படுகிறது. அப்படியானால் இறக்குமதி வரிகள் அடங்கலாக எமது நாட்டில் குறித்த அரிசி கிலோ ஒன்று 110 ரூபாவுக்கே விற்பனை செய்ய வேண்டும்.

ஆனால் அரசாங்கம் தற்போது அரிசிக்கு நிர்ணயித்துள்ள விலையின் பிரகாரம், ஒரு கிலோ 230 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டால் அரசாங்கத்துக்கு ஒரு கிலோவுக்கு 120 ரூபா இலாபம் கிடைக்கிறது.

அதேநேரம் அரிசி இறக்குமதிக்கு தனியார் நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கியுள்ளதால் அவர்களுக்கும் இந்த இலாபம் கிடைக்கும். அதனால் அரசாங்கம் இறக்குமதி செய்யும் அரிசிக்கான சில்லறை விலையை அறிவிக்க வேண்டும்.

மேலும் 2023இல் ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடி நிலையில் விவசாயிகளுக்கு உரம் நிவாரணம் வழங்கி இரண்டு போகத்தின் மூலம் 58 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி அறுவடை செய்து சேகரித்து வைத்திருந்தார். ஆனால் எமது நாட்டில் வருடத்துக்குத் தேவையாக இருப்பது 24 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியாகும்.

அப்படியானால் எஞ்சிய அரிசி தொகை அரிசி ஆலை உரிமையாளர்களிடமே இருக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க சேகரித்த அரிசியைக் கூட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நிர்ணய விலைக்கு விநியோகிக்க முடியாமல், அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கிலோவுக்கு 10 ரூபா அதிகரித்து வழங்கி இருக்கிறார்.

அத்துடன் அரிசி விலை தொடர்பில் வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவிப்பும் வியாபாரிகளுக்கு பிரச்சினையாக மாறியுள்ளது- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுப் படுகொலைகளுக்கு நீதி கோரி கவனவீர்ப்பு பேரணி

திருகோணமலை, டிசெ. 13

**கூட்டுப் படுகொலைகளுக்கான நீதி, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம், அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து திருகோணமலையில் கவனவீர்ப்பு பேரணி நடைபெற்றது.**



ஏ. எச். ஆர். சி. நிறுவனத்தின் அனுசரணையுடன் கிழக்கு மாகாண பிரதேச சிவில் வலையமைப்பு நடத்திய மனித உரிமைகள் தின நிகழ்வு திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெற்றது.


காலை 9 மணியளவில் சிவன் கோவிலடியில் இருந்து கவனவீர்ப்பு பேரணி ஆரம்பமாகியது.

இதன்போது வடக்கு - கிழக்கில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, உண்மை மற்றும் பொறுப்புக்கூறல், கூட்டுப் படுகொலைகளுக்கான நீதி, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம், அரசியல் கைதிகளின் விடுதலை, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு வழங்கல், மீனவர்களுக்கான நிவாரணம் வழங்கல், பன்முகப்படுத்தப்பட்ட பிரச்னைகளுக்கு முகங்கொடுக்கும் பெண்களுக்கான தீர்வு, 76 வருட தேசிய இனப்பிரச்னைக்கான நிலையான அரசியல் தீர்வு போன்ற விடயங்களை உள்ளடக்கி பதாகைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் மக்கள் நடைபவனியாக சென்று குளக்கோட்டன் மண்டபத்தை சென்றடைந்தனர்.

இதன் பின்னர், கிழக்கு மாகாண பிரதேச சிவில் வலையமைப்பு பிரதிநிதிகள் தாங்கள் எதிர்நோக்கிய உரிமை பிரச்னைகளை குறிப்பிட்டதுடன் பிரதேச செயலாளர், ஆளுநரின் பிரத்தியேக செயலாளர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர், சட்டத்தரணிகள் ஏ. எச். ஆர். சி. நிறுவனத்தின் இணைப்பாளர் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வின் இறுதியில் குறித்த விடயங்களை உள்ளடக்கிய மகஜர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ. எல். இசைதீனிடம் கிழக்கு மாகாண பிரதேச சிவில் வலையமைப்பின் பிரதிநிதிகளால் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக கிழக்கு ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (எ)

# கட்டாக்காலி மாடுகள், நாய்களால் போக்குவரத்துக்கு பெரும் சிரமம்!



கல்முனை, டிசெ. 13

கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்களால் ஏற்படும் விபத்துகள் மற்றும் போக்குவரத்து சிரமங்கள் தொடர்பில் பொது மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளான நற்பிட்டிமுனை, பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு சாய்ந்தமருது மற்றும் நகரப்பகுதிகளில் அதிகளவான கட்டாக்காலி மாடுகள், நாய்கள் உலா வருகின்றன.

இதனால், போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள், வாகனச் சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மாடுகள், நாய்கள் வீதியிலேயே படுத்துறங்குவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு முன்னுள்ள வீதியில் நாய்கள் நடமாடுவதோடு பல நாய்கள் பொலிஸ் நிலையம் செல்லும் வாசலில் வீதியில் படுத்துறங்குகின்றன.

மாலை நேரப் பொழுதில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதனால் இரவுப்பொழுதை ஒளியூட்டுவதற்காக வீதி விளக்குகள் போதியளவில் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலையும் இங்கு காணப்படுகின்றது.

எனவே, சமூகநலன் கருதி மாநகர சபை மற்றும் பிராந்திய சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் கல்முனையில் கஞ்சாவுடன் கைது

கல்முனை, டிசெ. 13

கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களிடம் மேலதிக விசார ணைகளை கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற கொண்டு வருகின்றனர்.



கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து மாறுவேடத்தில் சென்ற கல்முனை விசேட அதிரடிப் படையினர் துறை நீலாவணை பகுதியில் வைத்து குறித்த நபர்களை கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் உட்பட ஒரு தொகை கேரளக் கஞ்சா மற்றும் கைத்தொலைபேசி, மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் யாவும் களுவாஞ்சிகுடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டன.

43 மற்றும் 39 வயதுடைய இரு சந்தேக நபர்களும் கிளிநொச்சி மத்தியமுகாம் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

குறித்த கேரளக் கஞ்சா கிளிநொச்சி பகுதியில் இருந்து பேருந்து ஊடாக கடத்தப்பட்டு பின்னர் மோட்டார் சைக்கிளில் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். மேலும், இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி ஆர். ஏ. டி. சி. எஸ். ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ)

# உதயசங்கமம் மகளிர் அமைப்பின் ஒன்றுகூடலும் கௌரவிப்பு விழாவும்

களுவாஞ்சிகுடி, டிசெ.13



களுவாஞ்சிகுடி பிரதேச செயலக பிரிவின் மகிழூர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழ் இயங்கும் உதயசங்கமம் மகளிர் கொத்தணி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் கௌரவிப்பு விழா அந்த அமைப்பின் தலைவி திருமதி மங்கையற்கரசி கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உதயசங் கமம் மகளிர் கொத்தணி அமைப்பின் கீழ் சிறப்பாக இயங்கும் 15 சுய உதவி குழுக்களின் சேமிப் புகள் மற்றும் வழங்கியக் கடன் வசதிகள் போன்றவற்றின் முன்னேற்றம் தொடர்பாக சுய உதவி குழுக் களால் காட்சிப்படுத்தப்பட்டது.

மகிழூர் கிழக்கு கிராமத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை, க. பொ. த. சாதாரண தரம் மற் றும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் பாரா ட்டி கௌர விக்கப் பட்ட னர்.


இந் த நிகழ் வில் மண் முனை தென் எருவில் பற்று பிரதேச செயலா ளர் திருமதி சிவப் பிரியா வில்வ ரத்னம், எல். ஓ. எச். அமைப் பின் பொது முகாமை யாளர் திருமதி சகுந்தலா ரஞ்சினி மதிதரன், மண்முனை தென் எருவில்பற்று உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் மற்றும் களுவாஞ்சிகுடி இலங்கை வங்கி முகாமையாளர் சா. சிவஞானம் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும், மகிழூர் கிராமத்தின் முதல் சட்டத்தரணியான திருமதி நிறோஜினி புருசோத்மன் மற்றும் உதயசங்கமம் மகளிர் அமைப்பின் முன்னேற் றத்துக்கு பங்காற்றிய மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திரசோதி ஜெயதீஸ்வரன் ஆகியோரும் இந்த நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டனர். (எ)

# பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராக ஆதம்பாவா நியமனம்

கல்முனை, டிசெ. 13

அம்பாறை மாவட்டத்திலுள்ள கரையோரப் பிரதேசங்களான கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், நாவிதன்வெளி, பொத்துவில், திருக்கோவில், ஆலையடி வேம்பு ஆகிய பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவராக திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.



(எ)

# நல்லிணக்கம், சமாதானத்தை கட்டியெழுப்ப கலந்துரையாடல்

கல்முனை, டிசெ. 13

நாட்டில் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் சமூகங்களுக்குள்ளே இருக்கின்ற உறவுகளை கட்டியெழுப்புவது தொடர்பில் மூவின பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் அம்பாறையில் நடைபெற்றது.

சமாதானமும் சமூகப் பணியும் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் த. தயாபரன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய நல்லிணக்க குழுக்களிலிருந்து 50 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் .

எந்தவொரு சமூகத்துக்கும் அநீதி ஏற்படும் இடத்தில் அதனைச் சுட்டிக்காட்டியும் அவற்றுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கும் அதனை தட்டிக் கேட்பதற்கும் பலமான கட்டமைப்பை உருவாக்கும் அமைப்பாகவும், மத கலாசார நல்லிணக்கத்துக்குப் பாடுபடுகின்ற அமைப்பாக இந்த சமாதானமும் சமூகப் பணி அமைப்பு இருக்கும் என்றும் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாமீது 2 நாட்களில் 500 முறை தாக்குதல்!

## ஆயுத கிடங்குகளை அழித்ததாக இஸ்ரேல் விளக்கம்

டமாஸ்கஸ், டிசெ. 13

**சிரியாவில் உள்ள இரசாயன ஆயதங்கள் தீவிரவாதிகளின் கைகளுக்கு செல்வதைத் தடுக்க, முப்படைகள் மூலம் இரண்டு நாட்களாக 500 முறை தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியுள்ளது. இதில் சிரியாவின் ஆயுத கிடங்குகள் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.**



சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக, சன்னி முஸ்லிம்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இரு தரப்பினர் இடையே நீண்டகாலமாக நடந்து வந்த மோதல் கடந்த இம்மாதம் 8ஆம் திகதி முடிவுக்கு வந்தது. ஜனாதிபதி ஆசாத் ரஷ்யாவில் அடைக்கலம் புகுந்தார். சிரியாவில் ஆசாத் குடும்பத்தினரின் 50 ஆண்டு ஆட்சி முடிவுக்கு வந்தது.

சிரியாவில் முகமது அல் பஷீர் தலைமையில் எதிர்க்கட்சியினர் மாற்று அரசை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. கிளர்ச்சிப் படைக்கு அல் - கொய்தா, ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் ஆதரவு உள்ளது. இதனால் சிரியாவின் இராணுவக் கிடங்குகளில் இருந்த ஆயுதங்கள் எல்லாம் தீவிரவாதிகளின் கைகளுக்கு செல்லும் நிலை ஏற்பட்டது. இது ஆபத்து என உணர்ந்த இஸ்ரேல், சிரியாவில் உள்ள ஆயுத கிடங்குகளை எல்லாம் அழிக்க முடிவு செய்தது. இந்தப் பணியை முப்படைகளிடமும் இஸ்ரேல் ஒப்படைத்தது.

இதையடுத்து, இஸ்ரேல் இராணுவத்தின் முப்படைகளும், சிரியாவில் உள்ள விமான எதிர்ப்பு ஏவுகணைக் கிடங்குகள், விமானப்படை தளங்கள், டமாஸ்கஸ், ஹாம்ஸ் மற்றும் லதாகியா ஆகிய இடங் களில் உள்ள ஆயுத தொழிற்சாலைகள் ஆகியவற்றை குறி வைத்து 480 தாக்குதல்களை 48 மணி நேரத்துக்கு மேலாக நடத் தின.

இந்தத் தாக்குதல்களில் சிரியாவின் 15 போர்க்கப்பல்கள், நீண்ட தூர ஏவுகணைகள் அழிக்கப்பட்டன. மக்கள் மற்றும் போர்க்கப்பல்களுக் கான பாதுகாப்பை உறுதி செய்த இந்தத் தாக்குதல் நடவ டிக்கை அவசியம் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

சிரியா மீது இஸ்ரேல் திடீரென பயங்கர தாக்குதல் நடத்தியதால், சிரியாவை கைப்பற்றும் முயற்சியில் இஸ்ரேல் ஈடுபட்டுள்ளதாக தகவல் பரவியது. இதை மறுத்த இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள், "சிரியா எல்லையில் உள்ள இஸ்ரேலின் பகுதியை கைப்பற்றத்தான் இராணுவம் நுழைந்தது. சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நோக்கி இஸ்ரேல் படைகள் செல்கின்றன என்ற செய்தி தவறானது" என்றனர்.

இஸ்ரேல் இராணுவ அமைச்சர் கட்ஸ் கூறுகையில், "தெற்கு சிரியாவை இராணுவப் பலம் அற்றதாக மாற்ற இந்தத் தாக்குதல் அவசியம். ஆசாத் ஆட்சியை பின்பற்ற முயற் சிக்கும் எந்தவொரு படைக்கும் இதே கதிதான் ஏற்படும். சிரியா எல்லையில் ஹிஸ்புல்லா போன்ற அமைப்புகள் மீண்டும் தீவிரவாத தாக்குதல் நடத்து வதை தடுப்பதற்காக ஆயுதக் கிடங்குகளை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டது"- என்றார்.

இதனிடையே, சிரியா எல்லையில் ஆக்கிரமிப்பு பகுதிக்குள் இஸ்ரேல் நுழைந்ததற்கு எகிப்து, ஜோர்தான், துருக்கி மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் கண்டனம் வெளியிட்டுள்ளன. சிரியாவின் நிலையற்ற தன்மையை, தனது எல்லையை விரிவுபடுத்தும் நோக்கத்துக்கு இஸ்ரேல் பயன்படுத்தி கொள்வதாக அந்த நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. சிரியாவின் ஒரு பகுதிக்குள் இஸ்ரேல் ஊடுருவியது 1974ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மீறுவதாகவுள்ளது என ஐ. நா. தெரிவித்துள்ளது.

# சனாதனமும், ஆன்மீகமும்தான் பாரத நாட்டின் முக்கிய பலம்

## ஆளுநர் ஆர். என். ரவி உறுதி



சென்னை, டிசெ. 13

சனாதன தர்மமும் அதன் ஆன்மீக விழுமியங்களும்தான் நம் நாட்டின் முக்கிய பலம். பாரதத்தை விஸ்வ குருவாக மாற்ற வேண்டும் என்ற பாரதியாரின் கனவை நிறைவேற்ற அனைத்து பாரதிய மொழிகளையும் வலுப்படுத்துவதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்தார்.

பாரதியாரின் 143ஆவது பிறந்தநாள் மற்றும் இந்திய மொழிகள் தினவிழா ஆளுநர் மாளிகையில் உள்ள பாரதியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மகாகவி பாரதியார் பிறந்தநாளில் நாம் அனைவரும் அவரது வீரர்கள் என்பதால், தேசத்துக்கு நம்மால் முடிந்ததைச் செய்ய நேர்மறை ஆற்றலைப் பேண வேண்டும். பாரதியார் பாரதத்தையும் பாரதீய மொழிகளையும் மிகவும் நேசித்தவர். ஆதி சங்கராச்சாரியார், சுவாமி விவேகானந்தர் மற்றும் பிறர் போல அவரது குறுகிய வாழ்நாளில் சமூகத்தின் எழுச்சி மற்றும் இந்தியாவின் சுதந்திர வரலாற்றில் அவர் அழிக்க முடியாத அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளார்.

சனாதன தர்மமும் அதன் ஆன்மீக விழுமியங்களும்தான் நம் நாட்டின் முக்கிய பலம். எனவே, தீய சக்திகளுக்கு எதிராக நீங்கள் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்- என்றார். (ஏ)

# சூடானில் உள்நாட்டு போர் தீவிரம் குண்டுத் தாக்குதலில் 127 பேர் பலி!

கார்டூம், டிசெ. 13

சூடானில் உள்நாட்டு போர் நீடித்து வரும் நிலையில் துணை இராணுவப் படையினரின் முகாம்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. இதில் 127 பேர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான சூடானில் கடந்த 2021ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இராணுவத் தளபதியான ஜெனரல் படக் அல் - பர்ஹன் ஆட்சியை நடத்தி வருகிறார். துணை இராணுவப் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை இராணுவத்துடன் இணைக்க இராணுவத் தளபதியான ஜெனரல் படக் அல்- பர்ஹன் முயற்சி மேற்கொண்டார்.

இதற்கு துணை இராணுவப் படையின் அதிவிரைவு ஆதரவுப் படையினர் தரப்பில் எதிர்ப்புக் கிளம்பியது. இதனால் இராணுவத்துக்கும், துணை இராணுவத்துக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. 2022ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போராக மாறி கடுமையான மோதல்கள் நடைபெற்று வருகின்றன. சுமார் 2 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். அங்குள்ள கிராமங்களை துணை இராணுவப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இராணுவ ஆட்சியை கவிழ்க்க சதி தீட்டி வருகின்றர்.

இந்த நிலையில் துணை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களை குறிவைத்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் உட்பட 127 பேர் உயிரிழந்தனர். இதற்கு துணை இராணுவம் பதிலடி கொடுக்கும் என்பதால் உள்நாட்டு போர் தீவிரமடைந்துள்ளது. (ஏ)

# தென்கொரிய இராணுவ அமைச்சர் சிறையில் தற்கொலைக்கு முயற்சி

## ஜனாதிபதி தலைமறைவு! பொலிஸார் தேடுதல்

சியோல், டிசெ. 13

தென்கொரிய இராணுவ அமைச்சர் தற்கொலைக்கு முயற்சித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தென்கொரியாவில் கடந்த 3ஆம் திகதி ஜனாதிபதி யூன் சுக் இயோல் திடீரென இராணுவ அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். பின்னர் மக்களின் கடும் எதிர்ப்பால் அவசர நிலையை வாபஸ் பெற்றார். இதற்கிடையே அவசர நிலையை அறிவிக்க தூண்டுதலாக இருந்ததாகவும், அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதாகவும் இராணுவ அமைச்சர் கிம் யாங் ஹியூன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலைநகர் சியோலில் உள்ள சிறையில் அவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார். இந்த நிலையில் அவர் தற்கொலைக்கு முயற்சித்தார் என்றுகூறி பொலிஸார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

இதனைத் தொடர்ந்து தென்



கொரிய ஜனாதிபதி அலுவலகத்தில் பொலிஸார் நுழைந்து தேடுதல் நடத்தினர். தலைமறைவாகவுள்ள தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோலை கைது செய்ய முக்கிய ஆவணங்கள் திரட்டப்பட்டு வருவதால் அவர் விரைவில் கைது செய்யப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தற்கொலைப்படை தாக்குதலில் ஆப்கானிஸ்தான் அமைச்சர் பலி

காபுல், டிசெ. 13

ஆப்கானிஸ்தானில் அலுவலகத்தில் இடம்பெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் அமைச்சர் பலியானார்.

அங்கு தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதில் அகதிகள் விவகாரத்துறை அமைச்சராக செயல்பட்டு வந்தவர் கலில் ஹக்னி. இந்த நிலையில், காபுலில் உள்ள அகதிகள் விவகாரத்துறை அமைச்சக அலுவலகத்தில் கலில் ஹக்னி வழக்கமான பணிகளை செய்துகொண்டிருந்தார். அப்போது, அமைச்சக அலுவல கத்துக்கு வந்த நபர் தன் உடம் பில் மறைத்து கொண்டு வந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார்.

அலுவலகத்தில் நடந்த இந்த தற்கொலைப்படை தாக்குதலில் அமைச்சர் கலில் ஹக்னி உயிரிழந்தார். மேலும், அலுவலக ஊழியர்கள் 5 பேரும் உயிரிழந்தனர். (ஏ)

# "தமிழ் மொழியின் மிகப்பெரிய பொக்கிஷம் மகாகவி பாரதி"

புதுடில்லி, டிசெ. 13

தமிழ் மொழியின் பொக்கிஷமாக மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூல்கள் அமைந்துள்ளன என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டினார். புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாரதியாரின் படைப்புகள் அடங்கிய 23 பாகங்களை பிரதமர் மோடி




வெளியிட்டார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 விக்கெட் வித்தியாசத்தில் சிம்பாவே அசத்தல் வெற்றி



ஹராரே, டிசெ. 13

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் சிம்பாவே 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 தொடர் நடைபெறுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி ஹராரேவில் நடைபெற்றது.

இதில், ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது. குர்பாஸ் ஓட்டம் எதுவும் இன்றி ஆட்டமிழந்தார். செடிகுல்லா அடல் 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதையடுத்து களமிறங்கிய ஹஜ்ரத்துல்லாஹ் ஜஸாய் 20, முகமது இஷாக் 1, அஸ்மத்துல்லா ஓமர்சாய் 13 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து கரீம் ஜனத் மற்றும் முகமது நபி ஜோடி சேர்ந்து அணியை சரிவில் இருந்து மீட்டனர். இதில் கரீம் ஜனத் அரைச் சதம் அடித்தார். இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. ஆப்கானிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக கரீம் ஜனத் 54 ஓட்டங்கள் எடுத்தார். சிம்பாவே தரப்பில் ங்வாரா 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 145 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சிம்பாவே விளையாடியது.

தொடக்கம் முதல் சிம்பாப்வே அணி அதிரடியாக விளையாடியது. பிரையன் பென்னட், டியான் மியர்ஸ் ஆகியோர் சிறப்பாக விளையாடி ஓட்டங்கள் குவித்தனர். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் சிம்பாவே 6 விக்கெட்கள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்தது. பிரையன் பென்னட் 49 ஓட்டங்களும், டியான் மியர்ஸ் 32 ஓட்டங்களும் எடுத்தனர். இதனால் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் சிம்பாவே அணி வெற்றி பெற்றது. 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் 1 - 0 என சிம்பாவே முன்னிலை பெற்றுள்ளது.

(எ)

## ஓர் ஆண்டில் 4 சதங்கள் மந்தனா உலக சாதனை




பெர்த், டிசெ. 13

ஓர் ஆண்டில் 4 சதங்கள் அடித்த முதல் வீராங்கனை என்ற மாபெரும் உலக சாதனையை இந்தியாவின் மந்தனா படைத்துள்ளார்.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் 3 போட்டிகளிலும் இந்திய அணி தோல்வியடைந்தது.

இந்தத் தொடரின் 3ஆவது மற்றும் கடைசி போட்டியில் இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஸ்மிருதி மந்தனா சதம் அடித்து அசத்தினார்.

இந்திய அணியின் முன்னணி வீராங்கனையான மந்தனா இந்த வருடம் மட்டும் ஒருநாள் கிரிக்கெட்டில் 4 சதங்கள் அடித்துள்ளார். இதன் மூலம் மகளிர் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் ஓர் ஆண்டில் 4 சதங்கள் அடித்த முதல் வீராங்கனை என்ற மாபெரும் உலக சாதனையை அவர் படைத்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக 2, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தலா ஒரு சதம் என மொத்தம் 4 சதங்களை மந்தனா அடித்துள்ளார். (எ)

ஆஸி அபார வெற்றி

# ஒருநாள் போட்டித் தொடரை முழுமையாக இழந்த இந்தியா

பெர்த், டிசெ. 13

இந்தியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3 - 0 என அவுஸ்திரேலியா முழுமையாக கைப்பற்றியது.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் இரு போட்டிகளில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி பெர்த்தில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழந்து 298 ஓட்டங்கள் குவித்தது. அவுஸ்திரேலியா தரப்பில் சதர்லேண்ட் 110 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியா தரப்பில் அருந்ததி ரெட்டி 4 விக்கெட்கள் வீழ்த்தினர். இதையடுத்து 299 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய மகளிர் அணி களமிறங்கியது.

ஹார்லீன் தியோல் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஆஸியின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர் இந்திய வீராங்கனைகள்.

இருப்பினும் மறுமுனையில் நிலைத்து நின்று விளையாடிய ஸ்மிருதி மந்தனா சதம் (105 ஓட்டங்கள்) அடித்து அசத்தினார். இறுதியில் இந்திய அணி 45. 1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 215 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும இழந்தது. இதன் மூலம் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றதுடன் இந்தியாவை வெள்ளையடிப்பு செய்தது.



## இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் பற்றுச்சீட்டுகள் விற்றுத்தீர்ந்தது

லண்டன், டிசெ. 13

இந்திய கிரிக்கெட் அணி 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரின் முதல் போட்டி ஜூன் 20ஆம் திகதி ஹெடிங்லியில் தொடங்குகிறது. 2ஆவது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் உள்ள எட்ஜ்பஸ்டன் மைதானத்தில் ஜூலை 2ஆம் திகதி நடைபெறுகிறது. இந்த நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் 4 நாட்களுக்கான பற்றுச்சீட்டுகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துவிட்டதாக எட்ஜ்பஸ்டன் மைதான நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இல்லாமல் இங்கிலாந்தில் நடைபெறும் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு அனைத்து பற்றுச்சீட்டுகளும் விற்றுத்தீர்வது இதுவே முதன்முறையாகும். அதுவும் போட்டி தொடங்குவதற்கு இன்னும் 200 நாட்களுக்கு மேல் உள்ள நிலையில் பற்றுச்சீட்டுகள் விற்றுத்தீர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ரி - 20 போட்டியில் 100 விக்கெட் ஷகீன் அப்ரிடி உலக சாதனை

டர்பன், டிசெ. 13

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷகீன் அப்ரிடி ரி - 20 கிரிக்கெட் போட்டியில் 100 விக்கெட்கள் வீழ்த்தி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ரி - 20, 3 ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ரி - 20 தொடர் நடைபெறுகிறது.

முதலாவது போட்டி முடிவடைந்துள்ளது. இந்த ஆட்டத்தில் வீழ்த்திய 3 விக்கெட்களையும் சேர்த்து பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷகீன் அப்ரிடி ரி - 20 கிரிக்கெட்டில் இதுவரை 100 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். இவர் ஏற்கனவே ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளிலும் 100 விக்கெட்களை கடந்துள்ளார்.

இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் 3 வடிவிலான (டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி -20) போட்டிகளிலும் 100 விக்கெட்கள் வீழ்த்திய முதல் பாகிஸ்தான் வீரர் என்ற மாபெரும் வரலாற்று சாதனையை ஷகீன் அப்ரிடி நிகழ்த்தியுள்ளார்.

(எ)




## உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிகள் சவுதி அரேபியாவில்

சூரிச், டிசெ. 13

உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியை நடத்தும் வாய்ப்பை சவுதி அரேபியா பெற்றுள்ளது.

சர்வதேச உதைபந்து கூட்டமைப்பு (பிபா) சார்பில் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் நடத்தப்படுகிறது. கடைசியாக 2022இல் கட்டாரில் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் மெஸ்சி தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி சம்பியன் பட்டம் வென்றது. தொடர்ந்து 2026இல் அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா ஆகிய நாடுகளில் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டது

இந்த நிலையில் 2030 மற்றும் 2034ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண போட்டியை நடத்தும் உரிமத்தை எந்த நாட்டுக்கு வழங்குவது என்பது குறித்து சுவிட்சர்லாந்தில் உள்ள பிபா தலைமையகத்தில் "பிபா" நிர்வாக உறுப்பினர்கள் ஆலோசித்தனர்.

இதன் முடிவில் 2030ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியை நடத்தும் வாய்ப்பு ஸ்பெயின், போர்த்துக்கல், மொராக்கோ ஆகிய நாடுகளுக்கு வழங்கப்பட்டது.

சவுதி அரேபியாவுக்கு 2034ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியை நடத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டது. சவுதி அரேபியா உலகக் கிண்ணப் போட்டியை நடத்த உள்ளது இதுவே முதல் முறையாகும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித்...

பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 5 தேசியப்பட்டியல் ஆசனங்களைக் கைப்பற்றியதுடன், அதில் ஒரு ஆசனத்துக்காகக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார முன்னதாக நியமிக்கப்பட்டிருந்தார். (அ)

## சபாநாயகருக்கு...

இதன்படி, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தனது பாராளுமன்றக் குழுவின் ஊடாக சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளதாகவும், இதற்கு முழு எதிர்க்கட்சியினரும், அரசாங்கத்தின் மனசாட்சியுள்ள உறுப்பினர்களும் பங்களிப்பார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## எரிபொருள்...

இறக்குமதி செய்யப்பட்ட 30,000 மெற்றிக் தொன் எரிபொருளுடன் நாட்டை வந்தடைந்த கப்பல் மீள அனுப்பப்பட்டமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வா தெரிவித்தார்.

கப்பல் மீள அனுப்பப்படவில்லை, மீளச் சென்றுள்ளது.

அந்த கப்பலில் 15 மெற்றிக் தொன் பெற்றோலும் 15 மெற்றிக் தொன் டீசலும் இருந்துள்ளன.

உண்மையிலேயே இந்தக் கப்பல் கனியவள கூட்டுத்தாபனத்துக்கு எரிபொருள் விநியோகிப்பதற்காக நாட்டுக்குள் பிரவேசிக்கவில்லை.

இந்த கப்பல் திரும்பிச் சென்றதன் காரணமாக இலங்கைக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. நாட்டின் தேவைக்கு ஏற்ப எரிபொருள் தொகை காணப்படுகின்றது. ஆகவே, நெருக்கடி இன்றி எரிபொருளை விநியோகிக்க முடியுமென கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜ கருணா தெரிவித்தார். (அ)

## கொழும்புத்...

2025ஆம் ஆண்டின் நடுப்பகுதியாகும்போது கொழும்பு துறைமுகத்தில் மேலும் இரண்டு புதிய முனையங்கள் தமது செயல்பாடுகளை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கிறோம். அவற்றின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பை பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறோம்.

அதானி நிறுவனத்தின் முதலீடு தொடர்பில் இலங்கையில் உள்ள பிரச்னையானது மன்னார் காற்றாலைத் திட்டமாகும். அது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம். ஜனாதிபதி இதுகுறித்து தெளிவுபடுத்தியுள்ளதுடன், நீதிமன்றத்துக்கும் அறிக்கையிட்டுள்ளோம். இத்திட்டம் இலங்கைக்கு பாதகமானது.

அதானி குழுமம் அபிவிருத்தி செய்யும் கொழும்பு மேற்கு முனையம் தொடர்பிலான விவகாரத்தில் அவர்களுக்கு நிதியை அளிக்கும் அமெரிக்க நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் இருந்து விலகியுள்ளனர். அவர்களது நிதியில் இதனை செய்வதாக கூறியுள்ளனர். அதனால் அதானி நிறுவனம் தமது செயல்பாடுகளை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமாகும்.

கொழும்புத் துறைமுகத்தின் பெரும்பான்மையான பகுதி துறைமுக அதிகார சபைக்கு உட்பட்டதுதான். ஆனால், வேறு சில நிறுவனங்களும் தற்போது பணி புரிகின்றன. துறைமுகத்தில் எதனையும் நாம் தனியாருக்கு விற்பனை செய்யவில்லை. ஆனால், ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட பல விடயங்கள் உள்ளன. அதனால் விற்பனை செய்யப்பட்ட விடயங்களின் செயற்றிறனை அதிகரிக்கவேண்டும். அதற்குத் தேவையான உதவிகளை செய்ய முடியும் என்பதுடன், இதன் ஊடாக நாட்டுக்கு பெற்றுக்கொள்ள கூடிய அனைத்து நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம் - என்றார். (அ)

## சிம்மாசனத்தை...

அதன் மூலம் அரச பணியில் இடம் பெறும் பாகுபாடு களையப்படும்.

அரசு நிறுவனமொன்றுக்குள் நுழையும் குடிமகன் ஒருவர் அது தமது சொந்த நிறுவனம் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் அரச ஊழியர்களது செயல்பாடுகள் இருக்கவேண்டும். அதற்கு தேவையான மாற்றங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படும். இங்கு அனைவரும் சமமானவர்கள். எவரும் விசேட உரிமை பெற்றவர்கள் அல்லர்- என்றார். (அ)

## யாழ்ப்பாணம்...

இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த, 40 வயதான இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்பவர், இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த கைதி பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் உயிரிழந்த நபரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## தீர்வு...

பிரச்னைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக இருக்கிறது.

அவ்வாறான சந்தர்ப்பம் ஏற்படும் போது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் குரலாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தாத கட்சிகள் ஒன்றாக இணைந்து தமிழ் மக்களின் நிலைப்பாடு இதுதான் என்பதை அரசுடனான பேச்சுவார்த்தையின்போது முன்வைக்க வேண்டும்.இதுதான் கட்சியின் நிலைப்பாடாகவும் இருக்கும்.

இது தொடர்பாக எமது கட்சியின் மத்திய குழுவில் ஆராய்ந்து உரிய முடிவை எடுப்போம். தமிழரசுக் கட்சியின் செயலாளர் என்ற வகையில் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ்,புளொட்,ரெலோ ஆகிய கட்சிகளுடன் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலை ஒன்றாக எதிர்கொள்வது தொடர்பான பேச்சுக்களை நடத்தியிருந்தோம்.

அப்போது தாங்கள் அனைவரும் ஒரு கூட்டாக இருக்கிறோம். எனவே தமிழரசுக் கட்சிதான் தனித்து உள்ளது.எனவே நீங்கள் வந்து எமது சின்னத்தில் கேட்கலாம் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தனர். அந்த வகையில் திருகோணமலையில் ஒன்றாக போட்டியிட்டமையினாலேயே ஒரு பிரதிநிதித்துவத்தை தக்கவைக்கக்கூடியதாக இருந்தது. எனவே நாங்கள் முயற்சிகளை எடுத்திருக்கிறோம்.

கடந்த முறை உள்ளூராட்சித் தேர்தல் முறைமையினால் அதில் தனித்தனியாக போட்டியிட்டு பின்னர் ஒன்றாகலாம் என்ற ஆலோசனையை முன்வைத்திருந்தோம். ஏனெனில் அந்த தேர்தலில் வட்டார அடிப்படையிலானது. நாம் பெரும்பான்மையாக வெற்றி பெற்றாலும் உள்ளூராட்சி அமைப்புக்களில் ஆட்சியை பிடிக்கமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

அதனை தவறுதலாக புரிந்துணர்ந்த ஏனைய கட்சிகள் தேர்தல்களில் தனித்து போட்டியிட்டிருந்தமை உங்களுக்கு தெரியும். இருப்பினும் அரசமைப்பு, தீர்வு விடயத்தில் நாங்கள் அனைவரும் ஒரு தரப்பாக பயணிக்கவேண்டும் என்பது எனது கருத்து.

தமிழ்த் தேசிய கட்சிகள் இடையே வடக்கு-கிழக்கில் அதிகமான பிரதிநிதித்துவத்தை எமது கட்சி பெற்றுள்ளது. அத்துடன் எமது கட்சி 75 வருட வரலாற்று பாரம்பரியம் கொண்ட தாய்க் கட்சி. எனவே தமிழ்க் கட்சிகளை பொதுவான நோக்கத்துக்காக ஒன்றுபட்டு செயற்படுவதற்கான நடவடிக்கையை நாம் எடுப்போம் - என்றார். (அ)

# வவுனியா மாற்றுத்திறனாளிகள் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம்!



வவுனியா, டிசெ. 13

இயலாமையுடன் கூடிய நபர்களுக்கான சர்வதேச தினமான நேற்று மாற்றுத்திறனாளிகளால் வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

உள்வாங்கல் மற்றும் நிலை யான எதிர்காலத்திற்காக இயலாமையுடையவர்களின் தலைமைத்துவத்தை விரிவுபடுத்தல் எனும் தொனிப்பொருளில் வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமான ஊர்வலம் வைத்தி யசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா நகர சபை கலா சார மண்டபத்தை அடைந்தது. ஏனைய நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றன.

ஊர்வலத்தில் ஈடுபட்டவர்கள் நம் பிக்கை மனதில் உண்டு நம்பிகை கொடுங்கள், தொழில் உரிமை அனை வருக்கும் உண்டு, திறமைக்கு இயலாமை தடைகள் அல்ல போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

குறித்த நிகழ்வை வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் ஒஹான் நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஊழலை...

நந்திக குமாநாயக்க மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய தூதுவர் எரிக் வொல்ஷ் ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ஊழல் மற்றும் மோசடியை ஒழிப்பது தொடர்பில் கனடா அரசாங்கத்தின் அனுபவங்களை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் பொருளாதார பின்னடைவுக்கு முன்பு காணப்பட்ட அரசியல் கலாசாரமே காரணம் என சுட்டிக்காட்டிய கனேடிய தூதுவர், தற்போதைய அரசாங்கம் அந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

இலங்கைக்கான கனடிய தூதரகத்தின் இரண்டாம் செயலாளர் (அரசியல்) பெட்ரிக் பிகரிங்கும் இதன்போது கலந்துகொண்டார். (அ)

## வடக்கில்...

வைத்தியசாலை ஆய்வகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பல நோயாளிகளின் மாதிரிகள் எலிக்காய்ச்சல் என உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏனைய ஆய்வுப் பணிகள் இடம் பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீண்ட நாள் காய்சல், கண் சிவத்தல், உடல் சோர்வு, கடும் மஞ்சள் நிறத்தில் சிறுநீர் வெளியேறுதல், சிறுநீருடன் இரத்தம் கசித்தல் என்பன எலிக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகளாகும்.

எனவே இந்த நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் உடனடியாக வைத்தியரை நாடுவது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை,

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் குழாமொன்று நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்தது.

வடக்கு மாகாணத்தில் காய்ச்சல் காரணமாக இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில், கள நிலைமைகளை ஆராயும் நோக்கில் இந்த வைத்திய நிபுணர்கள் குழாம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களைக் குறித்த வைத்தியர்கள் குழாம், பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இந்திய...

மீனவர் பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான மனிதாபிமான மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் குறித்து வலியுறுத்தப்பட்டதாக அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்டு சிறையிலுள்ள மீனவர்களை விரைவில் விடுவிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், வடக்கு மாகாண மக்களுக்கான இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்பு தொடர்பிலும் மீன்பிடித் துறையின் அபிவிருத்தி உதவித் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் எக்ஸ் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை...

என இலங்கை மின்சார பொதுச் சேவை சங்கத்தின் தலைவர் மாலக விக்கிரம சிங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மின்சார பொதுச் சேவை சங்கத்தின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார சபை ஊழியர்கள் எவரும் போனஸ் கொடுப்பனவை கோரி போராட்டத்தில் ஈடுபடவில்லை.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் மின்சார சபை ஊழியர்களுக்கு போனஸ் வழங்க முடியாது என்று அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானித்திருந்தது.

பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு நாங்களும் போனஸ் கோரிப் போராட்டத்தில் ஈடுபடவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியின் மின்சாரத் தொழிற்சங்கம் தான் மின்சார சபை ஊழியர்களுக்கு போனஸ் கொடுப்பனவை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டது.

மின்சாரச் சங்கத்தின் தலைவர் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் ரஞ்சன் ஜயலாலுக்கு தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் இடமளிக்காத காரணத்தால் அவர் அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை தற்போது குறிப்பிட்டுக் கொள்கிறார்.

ஆட்சிமாற்றம் மாத்திரமே ஏற்பட்டுள்ளது. கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கிறது.

நீர்மின்னுற்பத்தி துறையின் ஊடாக மின்சாரம் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்ற பின்னணியில் எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என்று மின்சார சபை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளது.

மின்சார சபையை ஆக்கிரமித்துள்ள மாபியாக்களை கட்டுப்படுத்தாமல் மின்பாவனையாளர்களுக்கு ஒருபோதும் நிவாரணமளிக்க முடியாது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலுக்கு தடை

கொழும்பு, டிசெ. 13

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பரின் பெயரின்றி ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பட்டியலை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதை தடுத்து இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். (அ)

## அரிசி இறக்குமதியில் பெரும் நெருக்கடிநிலை

கொழும்பு, டிசெ. 13

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு அறவிடப்படும் வரியை குறைக்குமாறு அல்லது அரிசி விலையை அதிகரிக்குமாறு அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் விடுத்த கோரிக்கையை வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நிராகரித்தமையினால் அரிசி இறக்குமதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை வர்த்தக அமைச்சில் அமைச்சர் வசந்த சமரசிங்கவிற்கும் அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இவ்விரு கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டதுடன் அதனை அமைச்சர் நிராகரித்துள்ளார்.

இந்த நிலையில், அரிசியை இறக்குமதி செய்யமுடியாது என இறக்குமதியாளர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் உறுப்பினர் நிஹால் செனவிரத்ன, அரிசி இறக்குமதி வரியை குறைக்கும் அல்லது அரிசியின் விலையை அதிகரிக்கும் யோசனையை அமைச்சர் வசந்த சமரசிங்க நிராகரித்ததாகவும், இறக்குமதியாளர்கள் அரிசியை ஏற்கனவே ஓடர் செய்து இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் கூறினார். (அ)

## வாழ வழியின்றி இருக்கிறேன் இலங்கைக்கே அனுப்புங்கள்!

### எட்டு வயதில் தமிழகத்துக்குச் சென்ற யாழ் இளைஞன் மண்டியிட்டுக் கதறல்

சென்னை, டிசெ. 13

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக 1997ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து தமிழ்நாடு சென்ற ஜோய் என்ற இளைஞர் தன்னை மீண்டும் இலங்கைக்கு அனுப்பக்கோரி இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகத்தில் மண்டியிட்டு கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோய் என்பவர் 8 வயதாக இருந்தபோது, இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக அவரது பெற்றோர் படகில் ஏற்றி தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மண்டபம் சென்றடைந்த ஜோய் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்து வரும் நிலையில், எந்தவித மான அடையாள அட்டைகளும் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றார்.

இலங்கைக்கு மீண்டும் செல்லவேண்டும் என ஜோய் பல முறை மனு அளித்தும், தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் மீண்டும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்ற ஜோய், ஆட்சியர் அலுவலகம் அருகே மண்டியிட்டு போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதனால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து தகவலறிந்த கேணிக்கரை பொலிஸார் அவரை கியூ பிரிவு அலுவலகத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தி அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வலுசக்தி வேலைத்திட்டத்துக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவு!

### தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

**இலங்கை அரசாங்கத்தின் வலுசக்தி தொடர்பான வேலைத் திட்டத்துக்கு தங்களது தரப்பு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக இந்தியா தெரிவித்துள்ளது.**

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் வலுசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

வலுசக்தி அமைச்சில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தின் வலுசக்தி தொடர்பான வேலைத்திட்டத்துக்கு தங்களது தரப்பு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக இந்தியத் தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், புதிய அரசாங்கத்தின் கொள்கைகளின்படி, இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உறவு மேலும் பலப்படுத்தப்படும்.

மத வழிபாட்டுத் தலங்களை அடிப்படையாகக் கொண்ட இந்திய சூரிய படல வேலைத்திட்டமும் தொடரும் என இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா கூறினார். (அ)

## நாட்டின் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த பணிப்புரை!

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விடுத்தார்



கொழும்பு, டிசெ. 13

நாட்டின் நிதிக் கட்டமைப்பை பலப்படுத்தி, செயல்திறன் மிக்கதாக மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளார்

நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டின் நிதிக் கட்டமைப்பை பலப்படுத்தி, செயல்திறன் மிக்கதாக மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்தார்.

அத்துடன் நாட்டின் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த, சுயாதீன நிறுவனம் என்ற வகையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறும், அதற்கான ஒத்துழைப்பு மற்றும் வசதிகளை அரசாங்கம் வழங்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையின் நிதிச் செயற்பாடுகளை செயற்திறன் மிக்கதாக்குவதற்கு நல்லதொரு பொறிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதேவேளை பொருளாதாரம் மற்றும் நிதிக் கட்டமைப்புக்களின் முழுமையான முன்னேற்றங்களை நெருக்கமாக ஆராய்ந்த பின்னர், மத்திய வங்கியினால் நிதி ஸ்திரமாக்கல் மற்றும் நிதிக் கட்டமைப்பின் ஈடுகொடுக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

## இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் சட்டபூர்வ தன்மையை உறுதிப்படுத்த வசதி

கொழும்பு, டிசெ. 13

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் சட்டப்பூர்வ தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை சுங்கத்தினரால் இணையத்தள சேவை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, வாகனங்களின் செஸி எண்ணை உள்ளிடுவதன் மூலம் வாகனத்தின் சட்டப்பூர்வ தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கத்தின் பேச்சாளரும் மேலதிக பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட விடுத்துள்ள அறிக் கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 440 மெற்றிக் தொன் அரிசி இந்தியாவிலிருந்து வந்தது!

கொழும்பு, டிசெ. 13

இந்தியாவிலிருந்து கடந்த 9 ஆம் திகதி முதல் இன்று வரை 440 மெற்றிக் தொன் அரிசி தொகை, தனியார் துறையினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு சந்தையில் நாட்டரிசி உள்ளிட்ட பல வகையான அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்காக, அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி, அரிசியை இறக்குமதி செய்வதற்கு எதிர்வரும் 20 ஆம் திகதிவரை, தனியார் துறையினருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அதேநேரம், அரிசிக்கான அதிகபட்ச விற்பனை விலையை நிர்ணயித்து நுகர்வோர் விவகார அதிகார சபையினால் அதிவிசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## ஆபாச புகைப்படங்கள், காணொளிகள் சமூக ஊடகங்களில் பதிவிட்டவர் கைது!

கொழும்பு, டிசெ. 13

ஆபாச புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை சமூக ஊடகங்களில் பதிவிட்டதாக கூறப்படும் இளைஞன் ஒருவன் வடமேல் மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் புத்தளம், முந்தல் , பத்துலுஓயா பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வட மேல் மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அபிவிருத்தி செயல்பாடுகளுக்கு தென்கொரியா பூரண ஆதரவு



கொழும்பு, டிசெ. 13

தென் கொரியா - இலங்கை இடையிலான நீண்டகால உறவு பேணப்பட்டு இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு தென் கொரியா ஆதரவளிக்கும் என இலங்கைக்கான தென் கொரியத் தூதுவர் மியோன் லீ தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் அசோக ரன்வல்ல - தென்கொரிய தூதுவர் இடையே பாராளுமன்ற வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தென் கொரியாவால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பில் புதிய அரசாங்கத்துடன் கலந்துரையாடி அவற்றை துரிதப்படுத்தும் நடவடிக்கை மற்றும் கண்டி சுரங்கப்பாதை திட்டம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை - தென் கொரியா இடையிலான உறவை தொடர்ந்தும் வலுப்படுத்த தாம் எதிர்பார்த்துள்ளதாக சபாநாயகர் அசோக ரன்வல்ல இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி குஷானி ரோஹணதீரவும் பிரசன்னமாகியிருந்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org